மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவுநீரினால் எந்த மாசும் ஏற்படுத்தப்படவில்லை. அந்தக் கழிவுநீர் மொத்தமாக ஆவியாக்கப்படுகின்றது. மேலும், அந்தப் பகுதியின் பொதுமக்கள் நிலத்தடி நீரில் ஏற்கெனவே கடினத்தன்மை இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். நீரைக் காய்ச்சிதான் உபயோகித்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகின்றேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டுக் கொண்டதற்கிணங்க, மீண்டும் ஒரு முறை மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய Engineer–களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணை பெற்று, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

66—

தடுப்புச் சுவர்

*__36260__—**திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சாத்தையாறு அணை முதல் செல்லூர் கண்மாய் வரை உள்ள சாத்தையாறு ஓடையில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சாத்தையாறு முதல் செல்லூர் கண்மாய் வரை உள்ள ஓடையிலே தடுப்புச் சுவர் அமைக்கும் பணி நடைபெறுமா என்ற கேள்வியை

2013 அக்டோபர் 30]

எழுப்பியுள்ளார். ஏற்கெனவே, அங்கு வேண்டிய இடங்களிலே தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இப்போது தடுப்புச் சுவர் கட்டப்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், ஏழை, எளிய மக்களுடைய வாழ்வாதாரம் உயர்வதற்கும், ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் எண்ணற்ற நல்ல திட்டங்களைத் தீட்டி, அவை நேரடியாக ஏழை மக்களுக்குச் சென்றடையும்விதமாக நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சாத்தையாறு முதல் செல்லூர் கண்மாய் வரை தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையாகும். காரணம் என்னவென்றால், சாத்தையாறு அணை நிரம்பி வரும்போது வலசை, இளவன்குளம், கீழைச்சின்னாளம்பட்டி, பெரிய ஊர், சிறிய ஊர் என்ற கிராமங்களுக்கெல்லாம் தண்ணீர் செல்லக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. தற்போது நல்ல பருவமழை இருக்கின்ற காரணத்தினால், அங்கு தடுப்புச் சுவர் கட்ட வேண்டிய ஒரு நிலை இருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், மக்கள் வாழும் அந்தப் பகுதியில் நீர் சென்றுவிடாமல் இருப்பதற்கும், அந்தப் பகுதி மக்களுடைய அச்சத்தைப் போக்குவதற்கும், அங்கு தடுப்புச் சுவர் கட்ட வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, அதைக் கட்டிக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, அங்கு கட்டப்பட வேண்டிய இடங்களிலெல்லாம் தடுப்புச் சுவர் கட்டப்பட்டிருக்கின்றது.

மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, எந்த இடங்களில் தடுப்புச் சுவர் தேவையோ, அந்த இடங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

முற்பகல் 10—55

திரு. மு.வீ. கருப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொதுவான கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளம் கொண்ட மனித உயிர் காக்கும் காவல் தெய்வம். எனது சோழவந்தான் தொகுதியில் புகழ்மிக்க அலங்காநல்லூர் ஒன்றியப் பகுதியில் தீயணைப்பு நிலையம் இல்லாததால், சத்திரவெள்ளாளப்பட்டு என்ற ஊராட்சியில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், பொதுப் பணித் துறை அமைச்சரிடம் தீயணைப்பு நிலையம் குறித்து கேள்வி கேட்கிறீர்களே? உட்காருங்கள்.*

வினா வரிசை எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

67—

கால்நடை மருத்துவமனை

***22766—திரு. அ. பாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, மாதேமங்கலம் ஊராட்சி, குட்டூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*